[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1983 சனவரி 28

(பிற்பகல் 12-20)

வேண்டும் என்று சொன்னார்களே தவிர, பகை வந்தால் கூட எங்களால் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று சொல்வதில் பயன் இல்லை. ஆகவே சத்துணவு திட்டம் என்பது பெறாத பயன் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் . . .

4. ஒழுங்குப் பிரச்சினை (தொடர்ச்சி.)

(ஆ) உறுப்பினர்கள் கைது செய்யப்பெற்றுள்ளது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் ரகுமான்கான், சு. பாலன், என். வி. என். சோமு, பொன்னுரங்கம், புருஷோத்தமன் ஆகியோர் போலீசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் வருகின்றன. இப்படிப்பட்ட செய்திகளை அவைக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். கைது செய்யப்பட்டிருப்பவர்கள் எந்த செக்ஷன் பேரிலே கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமான செய்திகள் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கோ அல்லது பேரவைத் தலைவர் அவர்களுக்கோ வந்திருந்தால், அவைக்கு தெரிவித்திருக்கவேண்டும். எங்கள் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக, சென்னை மாநகராட்சியின் சீர்கேட்டை எதிர்த்து போராட்டம் நடத்தியிருக் கிறார்கள். அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்?

This involves a matter of privilege The Hon'ble Speaker is bound to protect the privileges of the members. We wan that the House should immediately be informed under what Section they have been arrested. Are they removed to the Central Jail or are they kept under custody? I would like to know the information from Hon'ble Speaker.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். டி. கோபாலன்): தகவல் வரவில்லை. இப்பொழுது கேட்டு நான் உடனடியாக அவைக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது எங்கோ வெளியூரில், திருநெல்வேலியிலோ கோயம்புத்தூரிலோ அல்ல. இங்கே சென்னையில்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த அவைக்கு உடனடியாக போலீசார் அறிவித்திருக்க வேண்டும். . . . (கூச்சல், குழப்பம்)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சென்னையிலேதான் இருந்தாலும் தகவல் வரவேண்டாமா? விவரங்கள் தெரிந்தவுடன் அவைக்கு அறிவிக்கப்படும்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: தகவல்கள் உடனேயே அனுப்பப் பட்டிருக்க வேண்டுமே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே விவாதங்கள் வேண்டாம். சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டால் அதிலே உங்களுக்கு எவ்வளவு அக்கறையும் கவலையும் இருக்கிறதோ, அந்த அளவுக்கு எங்களுக்கும் உண்டு. உறுப்பினர் களைப் பாதுகாக்கத்தான் நாங்கள் இருக்கிறோம்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: தொலைபேசி மூலம் கூட தெரிவித்திருக்கலாமே, ஏன் தகவல் வரவில்லை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சட்டமன்ற உறுப்பினர்களில் சிலர் கைது செய்யப்பட்ட விவரம் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்கு முன்கூட்டியே தெரிந்திருக் கலாம். ஆனால் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டால் எந்த வகையில், யாருக்கு அறிவிக்கவேண்டும் என்ற வரைமுறைகள் இருக்கின்றன. அந்த முறைப்படி தகவல்கள் தலைவருக்கு வருமேயானால், உடனேயே அவர்கள் துணைத் தலைவர் மூலமாக இந்த அவைக்கு அனுப்பிவைப்பார்கள். அப்படி செய்தி வந்தபிறகு வேண்டுமானால், இதைப்பற்றி பிரச்னை எழுந்தால், உறுப்பினர்கள் கேட்கும் முழு விவரங்களும் தரப்படும். ஆகவே அப்படிச் செய்தி வந்தால் உடனடியாக அறிவிக்கப்படும். இப்போது நீங்கள் சொல்வதைத்தான் நாங்கள் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறோம்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, வெளியிலே கைது செய்யப்பட்டிருந்தால், மாண்புமிகு நாவலர் அவர்கள் சொல்வதைப் போல வரைமுறைகள் கடைபிடிக்க நேரம் காலம் கேட்கலாம். உறுப்பினர்கள் சென்னையிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் காவல் நிலையத்திலே இருக்கிறார்களா அல்லது அங்கேயே கைது செய்யப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்களா என்கிற தகவல்களைத்தான் பெற நினைத்தோமே தவிர வேறு அல்ல. தொலைபேசி மூலம் கூட தெரியப்படுத்தியிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தகவல்கள் வந்தால்தான் அவைக்குத் தரமுடியுமே தவிர, நாங்களாகவே போன் பண்ணி கேட்க முடியாது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1983 சனவரி 28]

திரு. துரைமுருகன்: துணைத்தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நாங்கள் உங்களைக் குற்றம் சொல்லவில்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூறுவதிலோ, மாண்புமிகு நாவலர் அவர்கள் தரிவித்த கருத்துக்களிலோ நான் மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லவில்லை. இவர்களுக்கு செய்தி வந்தால் முறைப்படி அறிவிப்பார்கள். அது தெரியும். ஆனால் அரசினுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வரவிரும்புகிறேன். சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் சென்னையிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பெரியதாக தந்தியோ, டிரங்காலோ கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை—போன் மூலமாகக் கூட தெரிவிக்கலாம். ஆனால் உங்கள் போலீஸ் இலாகா எவ்வளவு மெத்தனமாக. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டு பேச எழுந்ததை அனுமதிப்பது குறித்து நானும் தடை சொல்லவில்லை. ஆனால் இந்த சப்ஜெக்ட் குறித்து இனிமேல் விவாதம் வேண்டாம். தகவல் வந்தால் அவைக்கு அறிவிக்கப்படும்.

திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே உங்களைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் விதிமுறைகளை அறிந்தவர். விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு பாங்கோடு முறையோடு நடந்து கொள்வார் என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது அந்த அபிப்பிராயத்தைக் கெடுக்காமல் இருக்கும்படியாக நான் கேட்டுக் கொள்கிறேன். வரைமுறைகளின்படி அறிவிக்கப்படும். ஆனால் வந்ததற்குப் பிறகு வரைமுறைகளில் தவறுகள் இருந்தால் சுட்டிக் காட்டலாம். அப்படி வரைமுறையின் அடிப்படையில் அறிவிக்கப் படும். ஆனால் திரு. துரைமுருகன் அவர்களே தற்போது அறிவித்து விட்டார்கள் ஒரு செய்தியை. வரைமுறையின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு இவர் அறிவித்த செய்தியோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அது எந்த அளவிற்கு இருக்கின்றது என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. சு. முத்துகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையின் மீது நன்றி தெரிவித்து, ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்